

# கனிவினைப் போற்றுவோம்!

கடமைதனைச் செய்வதிலே,
கடனே எனச் செய்வாருண்டு!
கடமையெனச் செய்வாருண்டு!
உடன்போகா மனத்தாருண்டு!

-வேறு-

கடமைதனைக் கடனாக எண்ணாமல்,
கண்டதுயர் நீக்கிடவே கரங்கோக்கும்;
மடவார் சீர்கருணை நங்கையிவள்!
மனமுவந்து தோள் சுமந்தாள்!
தடம்பதிக்கும் வாழ்வியலாய்த்
தரணிபுகழ் கொள்வாளோ!
விடைதேடா வினாக்களுடன்
விருப்பமுற்று வாழ்வாளோ!

தேவியவள் இராஜேஸ்வரி யவள்
தெளிந்த அறிவின் கொற்றம்!
மேவிய இந்த **இராஜேஸ்வரி**,
ஆய்வாளரில் ஓர்மணி மகுடம்!
தாவியோடிப் பணி செய்வதினால்,
களம்பலவும் பெருமை கொண்டு,
காவியமாய்த் தமிழ்போலே
களங்கமின்றி நிறைந்து வாழ்க!



அன்புடன்,

**கவிவளவன்** ஆகிய **கு. ப. அசோகன்**
12-11-2021 **(முகம் தெரியாத முகவரியுடன்)**

**(கவிதைப் படைக்கச் செய்த கனிவுசீர் தம்பி மீரான் என்னாளும் வாழியவே)**